SRI LANKA

A/L 2021

விரிவுரை
பேராசிரியர்.
தி. வேல்நம்பி

மாதிரி வினாத்தாள்

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021
General Certificate of Education (Adv. Level) Examination, 2021

ගිණුම්කරණ II
கணக்கீடு II
Accounting II

33 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

செய்நிரலாக்கத்தகா (Non-Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

அறிவுறுத்தல்கள் :

* முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாக்வுக்குமான விடையானது புதிய தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
* உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
* இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.

01. வரையறுக்கப்பட்ட எலிசபெத் பொதுக்கம்பனியின் 31.03.2021இல் முடிவடைந்த ஆண்டுக்கான பரீட்சை மீதி வருமாறு: (ரூபா 000)

விபரம்	வரவு	செலவு
வியாபார வருமதிகள், வியாபார சென்மதிகள்	4 200	3 900
ஊழியர் நன்மைகள் (ஓய்வூதியத்திற்கான ஏற்பாடு)		6 500
பண்டப்பெயர் (01.04.2016 இல் பெறப்பட்டது)	4 400	
01.04.2020 இல் வருமான வரிக்கான ஏற்பாடு		750
செலுத்த வேண்டிய வங்கிக்கடன் வட்டி		300
நிர்வாகச் செலவுகள்	5 950	
விநியோகக் கிரயம்	4 820	
ஏனைய செலவுகள்	950	
நிதிக்கிரயம்	4 010	
காசும் காசுக்குச் சமனானவையும்	9 250	
31.03.2021 இல் வியாபார இருப்புக்கள்	3 720	
சில்லறை வருமானங்கள்		90
12% வங்கிக்கடன்		3 000
விற்பனைகள்		61 250
விற்பனைக் கிரயம்	48 200	
செலுத்திய வருமானவரி	1 100	
செலுத்திய இடைக்காலப் பங்குலாபம் -சாதாரண பங்குகள்	2 700	
01.04.2020 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள்		7 000
01.04.2020 இல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		4 900
01.04.2020 இல் பொது ஒதுக்கம்		2 210
கூறப்பட்ட மூலதனம்-சாதாரண பங்குகள்		47 000
01.04.2020 இல் ஆதனம் பொறி உபகரணத்தின் கொண்டு செல்லும் பெறுமதி	48 600	
வாடிக்கையாளர் நட்ட ஈட்டுக்கான ஏற்பாடு		1 000
	137 900	137 900

[பக். 2ஐப் பார்க்க]

மேலதிக தகவல்கள்

1. 31.03.2021இல் இருப்புக்களின் கிரயம் ரூபா 3 720 000 ஆகக் காணப்பட்டபோதிலும் இவற்றின் தேறிய தேறக்கூடிய நிகரப்பெறுமதி ரூபா. 310 000 ஆகும்.
வாடிக்கையாளருக்கு விற்பனை அன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் விற்பனையாகக் கருதி அனுப்பப்பட்ட பண்டங்களில் ¼ பங்கு பெறுமதியானவை 31.03.2021 வரை வாடிக்கையாளரால் விற்பனை செய்யப்படாது இருப்பாகக் காணப்படுகின்றது. இவை கிரயத்தில் 20% இலாபம் சேர்த்து அனுப்பப்பட்டிருந்தன. இவற்றின் விற்பனைப் பெறுமதி 2 400 000 ஆகும். இது தொடர்பான சீராக்கங்கள் செய்யப்படாமலேயே விற்பனைக்கிரயம் கணிப்பிடப்பட்டிருந்தது.
2. 2018/2019ம் நிதியாண்டுக் காலப்பகுதியில் வாடிக்கையாளர் ஒருவர் கம்பனிக்கு எதிராக வழக்கு ஒன்றினைத் தொடர்ந்திருந்தார். இதனால் கம்பனியின் சட்டத்தரணியினுடைய ஆலோசனையின் பிரகாரம் ரூபா. 1 000 000 நட்டஈடாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் எனக் கருதி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஆனால் 2020.12.25ம் திகதி இவ்வழக்கிற்கான தீர்ப்பு அறிவிக்கப்பட்டு ரூபா. 1 290 000 நட்டஈடாகச் செலுத்தப்பட்டது. செலுத்தப்பட்ட இந்நட்டஈட்டுத் தொகையானது தவறுதலாக விற்பனைக் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. முன்னைய ஆண்டில் அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்ட ரூபா 200 000 இவ் வாண்டில் பெறப்பட்டதுடன் இது காசுக் கணக்கில் வரவிலும் வியாபார வருமதியாளர் கணக்கில் செலவிலும் பதியப்பட்டதைத் தவிர வேறெந்தப் பதிவுகளும் இடம்பெற்றிருக்கவில்லை. இந்த அறவிடமுடியாக்கடன் தொகை கடந்த ஆண்டில் விற்பனை விநியோகச் செலவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதோடு வியாபார வருமதியாளர் கணக்கிலிருந்தும் பதிவழிக்கப்பட்டிருந்தது. கம்பனியானது 31.03.2021ல் வியாபார வருமதியாளர் மீதியில் 10% பொதுநட்டக்கடன் ஒதுக்கீடு செய்யத் தீர்மானித்தது.
4. 2021ஆம் ஆண்டின் முழுமையான நாட்காட்டி ஆண்டிற்கும் (Calender Year) செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூபா. 1 200 000 நிர்வாகச் செலவின் கீழக் காட்டப்பட்டுள்ளது.
5. ரூபா 1 200 000 கிரயம் கொண்ட தளபாடமானது 01.01.2021ல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இது தவறுதலாகக் கொள்வனவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது.
6. கம்பனி ரூபா. 3 000 000 வங்கிக்கடனை வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக 01.04.2020 இல் பெற்றுக்கொண்டது. இக்கடனை 5 சமபகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு வருடமும் 31.03. இல் செலுத்துதல் வேண்டும். எனினும் முதல்பணம் தொடர்பாக எந்தவிதமான மீள்நிதித் தொகையும் இடம்பெற்றிருக்கவில்லை.
7. பண்டப்பெயரானது 20 வருடங்களில் பதிவழிப்புச் செய்தல்வேண்டும். இருப்பினும் இவை தொடர்பான எந்தப் பதிவழிப்பும் ஏடுகளில் இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை.
8. நிதியாண்டு 2020/21க்கான வருமான வரி ரூபா 100 000 ஆகும்.
9. 01.04.2020ல் ஆதனம் பொறி மற்றும் உபகரணம் தொடர்பான தகவல்களின் பகுப்பாய்வு வருமாறு.

சொத்துக்கள்	கிரயம்/மீள்மதிப்பீட்டுப் பெறுமதி	திரண்ட பெறுமானத் தேய்வு	முன்கொண்டு செல்பெறுமதி
காணி	22 000 000	-	22 000 000
கட்டடம்	25 000 000	2 500 000	22 500 000
மோட்டார் வாகனம்	6 000 000	2 000 000	4 000 000
தளபாடங்கள்	1 000 000	900 000	100 000
	54 000 000	5 400 000	48 600 000

காணியானது 01.04.2018ல் முதற்தடவையாக மீள்பதிப்பிடப்பட்ட போது உருவான மிகை ரூபா. 200 000 மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தினுள் காட்டப்பட்டுள்ளது. இவ்வருடம் 31.03.2021ல் ரூபா 19 500 000 ஆகக் காணி மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

10. நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் வருமாறு :
கட்டடம் - 40 ஆண்டுகள்
இயந்திரம் - 12 ஆண்டுகள்
தளபாடம் - 10 ஆண்டுகள்

[பக். 3ஐப் பார்க்க]

11. 01.04.2020ல் ரூபா 480 000 பெறுமதியான அலுவலக உபகரணமொன்று 4 வருட குத்தகையின் கீழக் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். அலுவலக உபகரணத்தின் உடைமையானது குத்தகைக் காலத்தின் இறுதியில் கம்பனிக்கு மாற்றப்படும். வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணம் ரூபா. 1 860 000 ஆகும். இவ்வாண்டின்போது செலுத்தப்பட்ட குத்தகைத் தவணைக் கட்டணமானது நிதிக்கிரயக் கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது. நான்கு ஆண்டு காலப்பகுதிக்கான குத்தகை வட்டி பின்வருமாறு:

ஆண்டு	வட்டி
2020/21	960 000
2021/22	780 000
2021/23	580 000
2023/24	320 000

வேண்டப்படுவது :

LKAS-1 (நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான வரையறுத்த எலிசபெத் பொதுக்கம்பனியின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட)

1. 31.03.2021இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று
2. 31.03.2021இல் முடிவடையும் வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றக் கூற்று.
3. 31.03.2021இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று.

(மொத்தம் 40 புள்ளிகள்)

02. **அ)** தொற்றுநீக்கித் திரவப் போத்தல்களைத் (Sanitizer bottles) தயாரிக்கும் ஒரு நடுத்தர அளவுக் கம்பனியான வரையறுக்கப்பட்ட சரண் (தனி) கம்பனியானது இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் (தயாரிப்பு மற்றும் பொதியிடல்) ஒரு சேவைப் பிரிவையும் (தொழில்நுட்பம்) கொண்டுள்ளது.

01) கம்பனியானது கீழே தரப்பட்டவாறு வருடாந்தம் உற்பத்தி மேந்தலைக் கிரயமாக ரூபா. 7 500 000 இனை மதிப்பிட்டிருந்தது.

கிரய உருப்படி	கிரயம் (ரூபா)
இயந்திரத் தேய்மானம்	2 500 000
கட்டட வாடகை	2 400 000
தரக்கட்டுப்பாட்டுச் செலவுகள்	800 000
மின்சாரம்	1 800 000
மொத்த உற்பத்தி மேந்தலைக்கிரயம்	7 500 000

02) மேந்தலைப்பகிர்வு அடிப்படைகள் கீழே தரப்பட்டுள்ளன :

அடிப்படை	உற்பத்திப் பிரிவு		சேவைப்பிரிவு	மொத்தம்
	தயாரிப்பு	பொதியிடல்	தொழில்நுட்பம்	
இயந்திர மணித்தியாலம்	300 000	150 000	50 000	500 000
தளப்பரப்பு (சதுர அடி)	1 600	500	400	2 500
மின்சாரப் பாவனை	1 000	600	200	1 800
தரப்பரிசீலனைகளின் எண்ணிக்கை	12	8	-	20
நேர்க்கூலி மணித்தியாலம்	100 000	200 000	-	300 000
கிரயப்பகிர்வு-தொழில்நுட்பம்	60%	40%	-	100%
போத்தல் ஒன்றிற்கான நேர்க்கூலி மணித்தியாலம்	1	2	-	-

[பக். 4ஐப் பார்க்க]

03) தொற்று நீக்கி திரவப்போத்தல் ஒன்றிற்காக மதிப்பிடப்பட்ட நேர்க் கிரயங்கள் கீழ்வருமாறு :

போத்தல் ஒன்றிற்கு	**ரூபா**
நேர் மூலப்பொருள்	20
நேர் ஊழியக்கிரயம்	15
மூலக்கிரயம்	35

வேண்டப்படுவது :

1. மேந்தலைகள் எவ்வாறு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டுப் பகிரப்படுகின்றது என்பதைக் காட்டும் கூற்று
2. ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் நேர்க்கூலி மணித்தியாலம் ஒன்றிற்கான மேந்தலை உறிசல் வீதம்
3. ஒரு தொற்றுநீக்கித் திரவப் போத்தலின் மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயம்

(20 புள்ளிகள்)

ஆ) வரையறுக்கப்பட்ட விஷன்(தனி) கம்பனியின் நான்கு ஊழியர்களினது 2021 பெப்ரவரி மாதத்திற்கான தகவல்கள் கீழ்தரப்பட்டுள்ளன.

பெயர்	வழமையான வேலை மணித்தியாலத்திற்கான கூலி வீதம்	மாதத்தில் வேலை செய்த மணித்தியாலம்
பார்வதி	மணித்தியாலத்திற்கு ரூபா 100	180
சண்முகன்	மணித்தியாலத்திற்கு ரூபா 110	170
ஆதி	மணித்தியாலத்திற்கு ரூபா 115	160
அகிலேஸ்	(ரூபா35 000 நிலையான அடிப்படைச் சம்பளம்)	-

மேலதிகத் தகவல்கள்

1. சாதாரண வேலை மாதமொன்று (அடிப்படைச் சம்பளம்) 160 வழமையான வேலை மணித்தியாலங்களைக் கொண்டது. மேலதிக நேரக் கொடுப்பனவானது வழமையான மணித்தியாலக் கூலி வீதத்தில் 140% இல் கணிப்பிடப்படும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) தொழிதருநர் மற்றும் ஊழியரின் பங்களிப்புகள் முறையே அடிப்படைச் சம்பளத்தின் 12% மற்றும் 8% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதிப்பங்களிப்பு (ETF) அடிப்படைச் சம்பளத்தின் 3% ஆகும்.
3. மாதாந்த அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக எல்லா ஊழியர்களும் மாதாந்தம் ரூபா. 3 000 வாழ்க்கைச்செலவுப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.
4. பார்வதியும் ஆதியும் காப்புறுதித் திட்டமொன்றிற்குச் சந்தா செலுத்துவதுடன் அவர்கள் ஒவ்வொருவரினதும் மாதாந்தப் பங்களிப்புத் தொகையான ரூபா 500 அவர்களது சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

வேண்டப்படுவது :

1. 2021 பெப்ரவரி மாதத்திற்கான சம்பளப்பட்டியல்
2. பொருத்தமான பேரேட்டுக்கணக்குகள்
3. 2021 பெப்ரவரியில் வருமானக் கூற்றிற்கு மாற்றப்படும் தொகை

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

03. சரண்யா என்பவர் 01.04.2021இல் பலசரக்கு வியாபாரமொன்றினை ஆரம்பித்துள்ளார். வியாபாரத்தின் அனைத்துக் காசுக்கொடுக்கல் வாங்கல்களும் வங்கி நடைமுறைக் கணக்கினூடாகச் செய்யப்படுகின்றன.

2021 ஏப்ரல் மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளன.

இல	**திகதி**	**காசேலை இலக்கம்**	**கொடுக்கல் வாங்கல்**
01	01.04.2021		சரண்யா ரூ. 800 000 இனைக் காசாக முதலீடு செய்ததுடன் ரூ. 120 000 பெறுமதியான மோட்டார் வாகனத்தையும் ரூ. 600 000 பெறுமதியான தளபாடங்களையும் கொண்டுவந்து நிறுவனத்தை ஆரம்பித்தார்.

[பக். 5ஐப் பார்க்க]

02	02.04.2021	501	ரூ. 50 000 பெறுமதியான சரக்குகள் கொள்வனவு செய்யப்பட்டன.
03	06.04.2021	450	ரூ. 250 000 கிரயம் கொண்ட சரக்கள் ரூ. 700 000 இற்குக் காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.
04	09.04.2021		ரூ. 120 000 கிரயமான சரக்குகள் இலாமின்றி ரமணனுக்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
05	12.04.2021	502	ரூ. 25 000 செலுத்தி 2 கணிப்பான்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவற்றின் ஆயுட்காலம் 2வருடங்கள் என மதிப்பிடப்பட்டது.
06	16.04.2021		ரூ. 500 000 கிரயம் கொண்ட சரக்குகள் அஜித் கம்பனியிடமிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
07	18.04.2021		அஸ்வினுக்குக் கடனடிப்படையில் விற்பனை ரூ. 600 000 இவற்றின் கிரயம் ரூ. 300 000 ஆகும்.
08	20.04.2021	701	ரமணனிடமிருந்து வரவேண்டிய தொகையில் 5% கழிவாகக் கழித்துக்கொண்டு மிகுதித் தொகை பெறப்பட்டது.
09	23.04.2021	503	அஜித் கம்பனிக்கு ¼ பங்கு தொகை 2% கழிவுடன் தீர்க்கப்பட்டது.
10	25.04.2021	504	செலுத்திய வாடகைக் கட்டணம் ரூ. 4 500
11	29.04.2021	505	நிறுவனத்தைத் துப்பரவு செய்தவருக்கு வழங்கியது. ரூ.2500
12	29.04.2021	907	அஸ்வினிடமிருந்து வரவேண்டிய தொகையில் ½ பங்கு பெறுமதியானவை 10% கழிவுடன் பெறப்பட்டது.

ஏப்ரல் மாதத்திற்காக 04.05.2021ல் பெறப்பட்ட வணிகத்தின் வங்கிக்கூற்று வருமாறு

திகதி	விபரம்	வரவு (ரூபா)	செலவு (ரூபா)	மீதி (ரூபா)
01.04.2021	காசு வைப்பு		800 000	800 000
04.04.2021	காசோலை இலக்கம் -501	450 000		350 000
06.04.2021	காசோலை இலக்கம் -450		700 000	1 050 000
12.04.2021	காசோலை இலக்கம் -502	250 000		980 000
20.04.2021	காசோலை இலக்கம் -701		108 000	1 088 000
25.04.2021	காசோலை இலக்கம் -503		122 500	1 210 500
28.04.2021	காசோலை இலக்கம் -504	4 500		1 206 000
30.04.2021	மீதி			1 206 000

வேண்டப்படுவது :

1. கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 12 வரைக்குமான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினைக் (பெறுமதியுடன்) காட்டுவதுடன் ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்கின்றதா (+) அல்லது குறைவடைகின்றதா (-) என்பதை அந்தந்தப் பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக. (இவ் வினாவிற்கு விடையளிப்பதற்காகக் கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக)

கொடுக்கல் வாங்கல் இல.	சொத்துக்கள்				பொறுப்புக்கள்		உரிமையாண்மை	
	ஆதனம், பொறி, இயந்திரம்	இருப்பு	வியாபார வருமதிகள்	காசு	வியாபார கொடுக்குமதிகள்	ஏனைய கொடுக்குமதிகள்	மூலதனம்	நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்கள்

2. 30.04.2021இல் முடிவடைந்த மாதத்திற்கான காசுப்பெறுவனவு நாளேடு
3. 2021 ஏப்ரல் மாதத்திற்கான வங்கி இணக்கக்கூற்று (வங்கிக்கூற்றின் படியான மீதியுடன் தொடங்கவும்.)

(மொத்தம் 40 புள்ளிகள்)

[பக். 6ஐப் பார்க்க]

04. அ) யுவன் கம்பனியின் 2021 மார்ச் மாதத்திற்கான கடன் கொடுத்தோர் பேரேட்டில் பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

	ரமணன்	கேசவன்	மிதுலன்	அரவிந்	மொத்தம்
2021.03.01இல் மீதி	150	80	120	-	350
கடன் கொள்வனவு	1 000	700	400	500	2 600
கொள்வனவுத்திரும்பல்	40	-	30	20	90
கொடுத்த காசு	820	350	300	-	1 490
பெற்ற கழிவு	30	20	20	-	70
2021.03.31இல் மீதி	260	410	150	480	1 300

2021.03.01இல் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு மீதியும் கடன் கொடுத்தோர் பேரேட்டு அட்டவணை மீதியும் சமமாகக் காணப்பட்ட போதிலும் 2021.03.31இல் இவ்விரு மீதிகளும் சமப்படவில்லை. இதற்கான பரிசீலனையின்போது பின்வரும் காரணங்கள் அவதானிக்கப்பட்டன.

1. மிதுலனிடம் கடன் கொள்வனவின்போது 10% வியாபாரக் கழிவு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் முதன்மையேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்ததுடன் கொள்வனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 20 000 ஆல் கூட்டிப் பதியப்பட்டிருந்தது.
2. வெளித்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்படாத போதிலும் வெளித்திரும்பல் கணக்கில் ரூபா. 9 000 எனப் பதியப்பட்டது.
3. ரூபா. 1 200 000 பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்று நிதிக் குத்தகை முறையில் வாங்கப்பட்டதுடன் ஆரம்ப வைப்புப் பணமாக ரூபா. 300 000 செலுத்தப்பட்டு மீதித் தொகை கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் பதியப்பட்டது.
4. கேசவனுக்குத் திருப்பி அனுப்பிய வரவுத்தாள் ஒன்றின் பெறுமானம் ரூபா 40 000 எவ்வித ஏடுகளிலும் பதியப்படவில்லை.
5. அரவிந்திற்குச் செலுத்திய ரூபா. 180 000 உம் பெற்ற கழிவு ரூபா 20 000 உம் அவரின் சொந்தக் கணக்கில் பதியப்படவில்லை.

வேண்டப்படுவது :

1. தவறுகள் திருத்த முன் வணிகத்தில் பதியப்பட்ட கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
2. தவறுகள் திருத்திய பின் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
3. திருத்திய கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு மீதிக்கு இணங்குவதற்கான கடன்பட்டோர் பேரேட்டு மீதியினை இணங்க வைக்கும் கூற்று.

(20 புள்ளிகள்)

ஆ) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2021 மார்ச் 31, 2020 மார்ச் 31, 2019 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட பாகுபலி தனியார் கம்பனியின் நிதிக்கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன.

முற்றடக்க வருமானக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்புக்கள் (ரூபா 000)

ஆண்டு முடிவு	2021.03.31	2020.03.31	2019.03.31
புரள்வு (விற்பனை)	300 000	275 000	260 000
விற்பனைக்கிரயம்	179 960	178 425	169 450
மொத்த இலாபம்	120 040	96 575	90 550
வட்டி மற்றும் வரிக்குமுன் இலாபம்	43 400	38 300	41 250
வரிக்குமுன் இலாபம்	38 000	35 700	34 300
வரிக்கு பின் இலாபம்	27 500	28 300	27 800

[பக். 7ஐப் பார்க்க]

நிதிநிலைக் கூற்றுக்களிலிருந்ததான பிரித்தெடுப்புக்கள் (ரூபா 000)

திகதியில்	2021.03.31	2020.03.31	2019.03.31
நடைமுறைச் சொத்துக்கள்			
இறுதியிருப்புக்கள்	19 000	15 000	14 000
வியாபார வருமதியாளன்	40 500	27 000	21 500
காசும் காசுக்குச் சமனானவையும்	8 500	6 200	7 400
	68 000	48 200	42 900
உரிமையாண்மை			
கூறப்பட்ட மூலதனம்	110 000	110 000	110 000
நிறுத்தி வைத்த வருவாய்	60 000	32 500	4 200
	170 000	142 500	114 200
நடைமுறையல்லாக் கடன்	42 000	56 000	38 000
நடைமுறைப் பரிப்புக்கள்			
வியாபாரச் சென்மதியாளன்	19 500	16 200	15 300
செலுத்த வேண்டிய வருமானவரி	9 500	9 100	7 600
அட்டுறுச் செலவுகள்	8 500	6 100	6 800
	37 500	31 400	29 700

வேண்டப்படுவது :

கீழ்வரும் விகிதங்களைக் கணிப்பிட்டு 2021 மார்ச் 31 மற்றும் 2020 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான வரையறுக்கப்பட்ட பாகுபலி தனியார் கம்பனியின் செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்க.

1. மொத்த இலாப விகிதம்
2. தேறிய இலாப விகிதம்
3. தொக்கு இலாப விகிதம்
4. கடன்பட்டோர் சேகரிப்புக்காலம்
5. தொழிற்படு மூலதனம் மீதான வருவாய் (ROCE)

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

05. அ) ராம், சரன் ஆகியோர் இணைந்து 01.04.2020இல் பங்குடமை ஒன்றை ஆரம்பித்தனர் பங்குடமை ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு:

- இலாபநட்டங்கள் ராம், சரண் ஆகியோருக்கிடையில் 2:1 என்ற விகிதத்தில் பகிரப்படும்.
- ஒவ்வொரு பங்காளரும் மாதாந்தச் சம்பளமாக ரூபா.20 000 பெற உரித்துடையவர்
- பங்காளர்கள் தமது மூலதனத்திற்கு வருடாந்தம் 10% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார்.
- பங்காளரினால் வழங்கப்படும் கடன்களுக்கு வருடாந்தம் 5% வட்டி பெறுவதற்கு அவர்கள் உரித்துடையவர்கள் ஆவார்.
- பங்காளர்களுடன் தொடர்புடைய அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் அவர்களுடைய நடைமுறைக் கணக்கினூடாகப் பதியப்படும்.

31.03.2021இல் பங்குடமையின் பரீட்சைமீதி பின்வருமாறு: (ரூபா 000)

	வரவு	செலவு
கொள்வனவுகள்	3 750	
மூலதனக் கணக்குகள்		
ராம்		2 700
சரண்		1 950
திலோவால் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம்		2 000
செயற்பாட்டுச் செலவுகள்	1 230	
செலுத்திய சம்பளம்		
ராம்	240	
சரண்	200	

நடைமுறைக் கணக்குகள்		
ராம்		115
சரண்		100
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கொண்டுசெல் பெறுமதியில்	7 200	
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பெ.தே	900	
விற்பனைகள்		9 150
வியாபார வருமதிகள்	1 350	
01.01.2021 இல் சரணால் வழங்கப்பட்ட கடன்		1 500
வியபாரச் சென்மதிகள்		510
செலுத்திய மூலதன வட்டி		
ராம்	120	
சரண்	100	
சரணுக்குச் செலுத்திய கடன் வட்டி	15	
சரணுக்குச் செலுத்திய வாடகை	150	
புதிய இடத்துக்குச் செலுத்திய வாடகை	540	
ஆரம்ப இருப்பு	215	
காசும், காசுக்குச் சமனானவையும்	2 015	
	18 025	18 025

மேலதிக தகவல்கள் :

1. 31.03.2021 இல் திலோ என்பவர் ரூபா. 2 000 000 ஐ மூலதனமாக இட்டுப் பங்குடமையில் இணைந்துகொண்டார். இத்தினத்தில் புதிய இலாபநட்ட விகிதம் ராம்:சரண்:திலோ என்பவர்களுக்கிடையில் 2:1:1 என்றவாறு காணப்படுவதுடன் நன்மதிப்பானது ரூபா. 800 000 மாக மதிப்பிடப்பட்டு மூலதனக் கணக்கினூடாகச் சீர்செய்வதற்கும் இணங்கிக்கொள்ளப்பட்டது.
2. இவ்வியாபாரமானது சரணுக்குச் சொந்தமான கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்பாகச் சரணுக்கு வருடாந்த வாடகையாக 360 000 செலுத்துதல் வேண்டும். எனினும் 01.01.2021இல் இவ்வியாபாரமானது ரூபா. 540 000 வருடாந்த வாடகையுடன் புதிய இடமொன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டதுடன், இத் திகதியில் முழு வாடகைத் தொகையும் செலுத்தப்பட்டது.
3. 01.01.2021 இல் ரூபா. 250 000 பெறுமதியில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தவறுதலாகக் கொள்வனவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது. இவற்றினுடைய பயன்படு ஆயுட்காலம் 5 வருடங்கள் ஆகும்.
4. 31.03.2021 இல் சரக்கிருப்புக்களின் கிரயம் ரூபா. 200 000ஆகும்.
   இவற்றின் தேறக்கூடிய நிகரப் பெறுமதி ரூபா. 220 000 ஆகும்.
5. பங்குடமையின் எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கிக்கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. 31.03.2021இல் உள்ளவாறான வியாபாரத்தின் வங்கிக்கணக்கிலுள்ள மீதியும் வங்கிக்கூற்று மீதியும் ஒத்திருக்கவில்லை. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பின்வருவன தெரியவந்தன.
   - வாடிக்கையாளன் ஒருவரினால் ரூபா 60 000 காசோலையொன்று நேரடியாக வைப்புச் செய்யப்பட்டது.
   - வழங்குநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 75 000 காசோலையொன்று கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.
   - நிலையான கட்டளையின் பெயரில் செலுத்திய பங்குடமையின் மின்சாரக் கட்டணம் ரூபா 15 000 வியாபாரத்தின் வங்கிக்கணக்கில் (பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

வேண்டப்படுவது :

1. 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் வருமானக்கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட)
2. 31.03.2021இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களுடைய நடைமுறைக் கணக்குகள்
3. 31.03.2021 இல் பங்குடமையின் வங்கியில் உள்ள காசு, வியாபார வருமதிகள் ஆகியவற்றின் சரியான பெறுமதிகள்.

(20 புள்ளிகள்)

[பக். 9ஐப் பார்க்க]

ஆ) வரையறுக்கப்பட்ட கிறிஸ்(தனி) கம்பனியின் 2021 மார்ச் 31 2020 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதிநிலைமைக் கூற்றுக்கள் பின்வருமாறு:

வரையறுக்கப்பட்ட கிறிஸ் (தனி) கம்பனியின் நிதிநிலைமைக் கூற்று (ரூ. 000)

மார்ச் 31ஆந் திகதி	2021	2020
சொத்துக்கள்		
நடைமுறையல்லாச் சொத்துக்கள்		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	23 820	22 420
திரண்ட பெறுமானத் தேய்வு	(10 590)	(9 470)
முன்கொணரற் பெறுமதி	13 230	12 950
நடைமுறைச் சொத்துக்கள்		
இருப்புக்கள்	320	470
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	1 702	1 270
காசும் காசுக்கு சமனானவையும்	398	210
மொத்தச் சொத்துக்கள்	15 650	14 900
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்		
உரிமையாண்மை		
கூறப்பட்ட மூலதனம்	12 200	12 200
நிறுத்தி வைத்த வருவாய்	1 260	660
	13 460	12 860
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		
நிண்டகாலக் கடன்கள்	450	1 000
நடைமுறைப் பொறுப்புக்கள்		
குறுங்காலக் கடன்கள்	150	150
வியாபாரச் சென்மதிகள்	1 470	540
கடன்மீது செலுத்த வேண்டிய வட்டி		50
செலுத்த வேண்டிய வருமான வரி	120	300
	1 740	1 040
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்	15 650	14 900

மேலதிக தகவல்கள்

1. 2021 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானவரிச் செலவினம் ரூ. 175 000 ஆகும்.
2. கிரயம் ரூ. 1 900 000 ஆகவும் 2021 மார்ச் 31 இல் திரன்டபெறுமானத் தேய்வு ரூ. 850 000 ஆகவும் இருந்த இயந்திரமொன்று 2021 மார்ச் 31 இல் ரூ. 2 000 000 இற்கு விற்கப்பட்டது.
3. கம்பனி ஆண்டின்போது அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்குலாபமாக ரூ. 300 000 இனைச் செலுத்தியது.
4. கடன்கள் மீது 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வட்டிச் செலவு ரூ. 325 000
5. 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ஏனைய முற்றுமடங்கிய வருமானங்கள் இருக்கவில்லை

வேண்டப்படுவது

LKAS - 07 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன்படி 2021 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட கிறிஸ்(தனி) கம்பனியின் காசுப்பாய்ச்சல் கூற்று. (செயற்பாட்டு நடவடிக்கையினை நேரில் முறையில் அறிக்கையிடுக.)

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

[பக். 10ஐப் பார்க்க]

06. அ) வரையறுக்கப்பட்ட ஹிட்லர் (தனி) கம்பனியானது மட்பாண்டப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது.உற்பத்திப் பொருள் ஒன்றின் விற்பனை விலை மற்றும் உற்பத்திக் கிரயம் தொடர்பான தகவல்கள் வருமாறு :

	ரூபா
விற்பனை விலை	160
நேர் மூலப்பொருள் செலவு	35
நேர்க்கூலிக் கிரயம்	45
மாறும் மேந்தலைக் கிரயம்	10
நிலையான செலவு	8

வருடத்துக்கான மொத்த நிலையான மேந்தலைச் செலவு ரூபா 700 000 ஆகும். நிறுவனம் தற்போது 17 500 அலகுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது.

வேண்டப்படுவது :

1. இலாபநட்டமற்ற புள்ளி அலகுகளிலும் பெறுமதியிலும்
2. பாதுகாப்பு எல்லை அலகுகளிலும் பெறுமதியிலும்
3. பங்களிப்பு விற்பனை வீதம்
4. ரூபா 700 000 இனை இலக்கு இலாபமாக உழைப்பதற்கு எத்தனை அலகுகளை விற்பனை செய்ய வேண்டும்.
5. அடுத்த ஆண்டில் அலகு மாறும் கிரயம் 20% இனால் அதிகரிக்கின்றது. பங்களிப்பு விற்பனை வீதத்தில் மாற்றம் ஏதுமின்றி நிலையானதாக பேண பொருளின் விற்பனை விலையினைப் புதிதாக நிர்ணயிக்க வேண்டுமாயின் புதிய விற்பனை விலை யாது?

(20 புள்ளிகள்)

ஆ) கேசவன் வணிகமானது தன்னிடமுள்ள பழைய அழுக்கு நீக்கி இயந்திரமொன்றுக்குப் பதிலாகப் புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு எண்ணியுள்ளது. இதற்கான தகவல்கள் வருமாறு:

	ரூபா
• தற்போதுள்ள இயந்திரத்தின் கிரயம்	2 500 000
• புதிய இயந்திரத்தின் கொள்விலை	4 000 000
• புதிய இயந்திரத்தினை தயார்ப்படுத்தல் செலவு	200 000
• புதிய இயந்திரம் தொடர்பாக ஊழியருக்குப் பயிற்சியளித்தற் செலவு	50 000
• பழைய இயந்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விலை	750 000
• பழைய இயந்திரத்தின் விற்பனை தொடர்பாக விற்பனைத் தரகருக்குச் செலுத்த வேண்டியது	100 000
• தொழிற்படு மூலதனத்தில் ஏற்படும் தேறிய அதிகரிப்பு	260 000

இவ்வியந்திரத்தின் பயன்பாட்டினால் அதன் ஆயுட்காலம் முழுவதும் ஏற்படும் காசுப்பாய்ச்சல் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது.

1. வருமானத்தில் ஏற்படும் தேறிய அதிகரிப்பு

வருடம்	01	02	03	04	05
ரூபா	1 750 000	1 000 000	(800 000)	900 000	950 000

2. வருடாந்தச் செயற்பாட்டுச் செலவில் ஏற்படும் தேறிய அதிகரிப்பு

வருடம்	01	02	03	04	05
ரூபா	390 000	200 000	(250 000)	50 000	40 000

3. இவ்வியந்திரம் 5 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 800 000 இற்கு விற்பனை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

[பக். 11ஐப் பார்க்க]

4. ஒவ்வொரு ஆண்டுக்குமான வருமான மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் தேறிய அதிகரிப்பு முதலாம் வருடத்தினை அடிப்படையாகக் கொண்டது.
5. முதலாம் வருடத்திற்கான செயற்பாட்டுச் செலவு ஊழியருக்கான பயிற்சியளித்தற் செவினையும் உள்ளடக்கியுள்ளது.
6. ஒவ்வொரு ஆண்டுக்குமான இலாபத்தில் 10% வரிசெலுத்துதல் வேண்டும்.
7. 2 ஆம் வருடத்தில் ரூபா 20 000 பழுதுபார்த்தல் செலவு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வேண்டப்படுவது :

1. ஒவ்வொரு ஆண்டுக்குமான வரிக்குப் பின் இலாபம்
2. ஒவ்வொரு ஆண்டுக்குமான தேறிய செயற்பாட்டுக் காசுப்பாய்ச்சல்.
3. முதலீட்டின் திரும்ப அளித்தற் காலத்தினைக் கணிப்பிடுக. இது தொடர்பாக உமது அவதானம் யாது?

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)